# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032,
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ).

முறையீட்டு மனு எண்: **0173/பே/2015**

ஆணை எண்: **076/2017**

நாள்: **26/04/2017**

மு. மாரிமுத்து,
எண்.18, திருமலைநாயுடு தெரு,
திருவைகுண்டம்–628 601 – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திருவைகுண்டம் பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம் –628 601. – எதிர் மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் பேரூராட்சியைச் சேர்ந்த திரு. மு. மாரிமுத்து என்பவரது 25.07.2015 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் 31.07.2015 அன்று பெறப்பட்டு 173/2015 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:-

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் பேரூராட்சியைச் சேர்ந்த திரு. மு. மாரிமுத்து அவர்களின் 25.07.2015 நாளிட்ட முறையீட்டு மனுவில் மனுதாரர் கீழ்க்கண்டவாறான புகார்களை தெரிவித்துள்ளார்:-

(1) தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் பேரூராட்சியில் பொது நிதி என்ற பெயரில் பல வழிகளில் போலி பில்கள் மூலம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

(2) திருவைகுண்டத்தில் ஆற்றுப் பாலம் ஒன்று புதியதாக கட்டப்பட்டுள்ளது. அந்தப் பாலம் பாராங்குசநல்லூர் கிராம ஊராட்சி பகுதியில் செல்கிறது. அந்த பாலத்தினை பராமரிக்கக்கூடியவர்கள் திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பாராங்குசநல்லூர் கிராம ஊராட்சி ஆகும். ஆனால் அதற்கு மாறாக திருவைகுண்டம் பேரூராட்சியில் பாலத்தில் மின் கம்பம் நட்டு லைட்டுகள் அமைக்க தவறான தீர்மானம் நிறைவேற்றி, அதனை தூத்துக்குடி மாவட்ட ஆட்சி தலைவரிடமும் மறைத்து அனுமதி பெற்று போலியான சாமான்கள் மூலம், லைட்டு போட்டு பல லட்சம் ரூபாய் மோசடி நடந்துள்ளது.

(3) மேலும், பாராங்குசநல்லூர் கிராம ஊராட்சி பகுதியில் பட்டு கியாஸ் குடோன் முன்பு பேரூராட்சி சார்பில் பல லட்சம் செலவில் உயர் அழுத்த மின் விளக்கு பொருத்தப்பட்டு நிதி முறைகேடு நடந்துள்ளது. மேலும் பட்டு கியாஸ் நிறுவனத்திடமும் கையூட்டு பெறப்பட்டுள்ளது.

(4) வருடாந்தர டெண்டர் அனைத்தும் போலி நிறுவனங்கள் மூலமாக சாமான்கள் சப்ளை இல்லாமல் ஸ்டாக் என்ட்ரி மட்டும் செய்து போலி பில்கள் மூலம் மோசடி நடந்துள்ளது. அதற்கு உடந்தையான மின் பணியாளர் திரு. கெ. தமிழ் செல்வன் கோடிக் கணக்கில் சொத்து சேர்த்துள்ளார்.

(5) மேலும் திட்டப் பணிகள் டெண்டர் அனைத்தும் பினாமி பெயரில் செய்து வருகின்றனர். நல்ல கான்ட்ராக்டர்களை பதிவு செய்திடாமல் தடுத்து நிறுத்தி விடுகின்றனர். இதனால் திட்டப் பணிகள் அனைத்தும் தரம் அற்று உள்ளது பணம் வாங்கும்வரை மட்டுமே பணியாக உள்ளது. மழை வெள்ளத்தால் காணாமல் போய் விடுகிறது. திட்ட நிதியில் வாங்கப்பட்ட டிராக்டர் (1) பவர் டில்லர் அதனுடன் கூடிய டிரைல்லர்கள் போலி தீர்மானங்கள் மூலம் பழைய இரும்பு என ஏல பதிவேட்டில் பதிவு செய்து கொள்ளை நடந்துள்ளது என தெரிவித்து மேற்படி பேரூராட்சியில் நடந்துள்ள ஊழல்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார். மேற்படி முறையிட்டு மனு மீது 22.12.25 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையின் போது மனுதாரர் கீழ்கண்டவற்றை அன்னாரது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்:-

"ஸ்ரீ வைகுண்டம் ஆற்றுப்பாலம் பாரங்குச நல்லூர் கிராம ஊராட்சிக்கு செல்கிறது. மாவட்ட ஆட்சியரிடம் தவறாக தகவல் தெரிவித்து மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி வாங்கி லைட் போட்டு விட்டார்கள்." என்று குறிப்பிட்டார்.

"எனது வேறு வார்டில் எந்த பணிகளும் நடைபெறவில்லை. பேரூராட்சி தலைவரே பினாமி பெயரில் வேலை செய்கிறார்கள் என்பதற்கு என்னிடம் ஆதாரம் இல்லை. நவ திருப்பதியில் முதல் தலமான ஸ்ரீவைகுண்டத்தில் சரியான சாலை வசதி இல்லை. பேரூராட்சியில் மின் பணியாளராக உள்ள திரு. தமிழ்செல்வன் கோடிக்கணக்கில் சொத்து சேர்த்துள்ளார். இதுகுறித்து தற்போது என்னிடம் ஆதாரம் ஏதுமில்லை. ஒருவாரத்தில் அனுப்பிவைக்கிறேன். திட்ட நிதியில் வாங்கப்பட்ட டயர் மின் டிராக்டர் அனைத்தும் போலி தீர்மானம் மூலம் போடப்பட்டு கொள்ளை நடந்துள்ளது. இது எப்பொழுது வாங்கப்பட்டது என்ற ஆதாரம் ஏதுமில்லை." என்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

2. மேற்படி முறையீட்டு மனு குறித்து செயல் அலுவலர், திருவைகுண்டம் பேரூராட்சி அவர்களிடம் இம்முறைமன்ற நடுவ கடித என்.173/2015-டி நாள் 5/9/2015 மூலம் விளக்க அறிக்கை கோரப்பட்டு அதன்படி, செயல் அலுவலர் 09.10.2015 நாளிட்ட விளக்க அறிக்கை ந.க.எண்.457/2015ல், "ஸ்ரீ வைகுண்டம் பேரூராட்சி பகுதியில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே புதிய ஆற்றுப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் அரசு மருத்துவமனை மற்றும் அனைத்து அரசு அலுவலகங்களும் இயங்கி வருவதால் புதியதாக அமைக்கப்பட்ட ஆற்றுப் பாலத்தின் வழியே அதிக வாகன போக்குவரத்து உள்ளதால் பொது மக்கள் நலன் கருதி 24 புதிய LED விளக்குகள் அமைக்க மன்றத் தீர்மானம் எண்.380 நாள்: 10.07.2014 அனுமதிக்கப்பட்டதாகவும், இப்பாலத்தில் புதிய விளக்கு அமைக்க தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்கள் / நெடுஞ்சாலை கோட்டம் பொறியாளர் அவர்கள் / வட்டாட்சியர் அவர்கள் / உதவி இயக்குநர் அவர்கள் / அனுமதி பெறப்பட்டுள்ளது என்றும் புதிய மின் விளக்கு அமைக்க மதிப்பீடு ரூ.12.50 லட்சத்தில் அமைத்திட மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று பணிகள் நல்ல முறையில் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது என்றும் அதில் முறைகேடுகள் ஏதுமில்லை" என்று செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேலும், திருவைகுண்டம் பேரூராட்சியின் சார்பில் நடைபெறும் திட்டப் பணிகள் அனைத்தும் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி மற்றும் வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் உரிய விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டு அனைத்து செலவினங்களும் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரம் பெற்ற பின்னரே மேற்கொள்ளப்படுவதால் முறைகேடுகள் நிகழ வழியில்லை என்றும் வருடாந்திர ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படும் போது உரிய விளம்பரம் செய்யப்பட்டு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு பேரூராட்சி மன்ற அனுமதி பெற்ற பின்னரே நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

திருவைகுண்டம் பேரூராட்சியில் பயனற்ற பொருட்களை ஏலம் விடும் நடவடிக்கைகள் குறித்து பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதல் பெற்ற பின்னர் பொதுமக்களுக்கு அறிவிப்பு செய்யப்பட்டு ஏலம் விடப்படுகிறது எனவும் ஏலத்தொகை பேரூராட்சியின் வங்கிக்கணக்கில் வரவாக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், மின் விளக்கு பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட ஒப்பந்த மலரிலும் வெளியிடப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பேரூராட்சியின் மன்ற அனுமதியுடன் பணிகள் நல்லமுறையில் முடிக்கப்பட்டுள்ளது எனவும் மேலும் அருகில் உள்ள பேரூராட்சிகளில் இதுபோன்ற விளக்குகள் அமைக்கப்பட்ட விலைப்புள்ளிகளும், இப்பேரூராட்சியில் அமைக்கப்பட்ட விளக்குகளின் விலைப்புள்ளிகளும் ஒருங்கிணைந்தாற்போல் உள்ளது என சான்றளித்தும் செயல் அலுவலர் அவர்களது 13.4.2016 நாளிட்ட கடிதம் ந.க.எண். 109/அ1/2016ல் தெரிவித்துள்ளார்.

பின்னர் முறையீட்டு மனு சம்பந்தமாக 04.7.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையின் போது செயல் அலுவலர் அளித்த வாக்குமூலத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

> புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள திருச்செந்தூர் திருநெல்வேலி சாலையினை ஒட்டி ஸ்ரீவைகுண்டம் செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள பாலம் அந்த பாலத்தில் போடப்பட்டுள்ள மின்விளக்குகள் அனைத்தும் ஸ்ரீவைகுண்டம் பேரூராட்சி மக்கள் பயன்பாட்டிற்கானது. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பராங்குசநல்லூர் ஸ்ரீவைகுண்டம் பேரூராட்சியை

தாண்டி 4 கி.மீ. தொலைவில் உள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்புதல் பெற்று மாவட்ட ஆட்சியர் கடித எண்.4745/2014/ப1. நாள் 22.11.2014 ஆணையின்படி ரூ.12.50 இலட்சம் பேரூராட்சியினுடைய பொதுநிதியின் கீழ் செலவிட அனுமதிபெற்று மாவட்ட ஆட்சியர் ஆணையின்படி பின்விளக்குகள் பொருத்தப்பட்டது. இரு ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டு குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியவருக்கு பணி வழங்கப்பட்டது. மாவட்ட ஆட்சி தலைவருக்கு பின்விளக்குகள் அமைப்பது குறித்த செயல் முன் வடிவிலோ அல்லது பேரூராட்சி இயற்றிய தீர்மானத்திலோ பின் விளக்குகள் அமைக்கப்பட்ட பகுதி கிராம பஞ்சாயத்து பகுதி அல்லது பேரூராட்சிக்கு சொந்தமான பகுதி எது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள திரு. தமிழ்ச்செல்வன் என்ற மின் வினைஞர் (Electrician) ஆழ்வார் திருநகரில் வீடு கட்டியுள்ளார் என்று புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது உண்மை. அவர் அதற்குரிய துறை அனுமதியை பெறவில்லை. புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள உயர் கோபுர மின் விளக்கு மூன்று ரோடுகள் சந்திக்கின்ற இடத்தில் அமைந்துள்ளது. பாலத்தில் இருந்து இறங்கக்கூடிய வாகனங்களுக்கும் பிற இடங்களுக்கு வெளிச்சம் தரும் விதத்தில் அமைந்துள்ளது. வேறு எந்த தனி நபருக்கும் பயன் தரும் வகையில் அமைக்கப்படவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

மேலும் செயல் அலுவலர் ஆதார ஆவணங்களாக பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்ட பொது சுகாதார பணிகள், குடிநீர் விநியோகப் பணிகள், டிசம்பர் 2013 செலவுச் சீட்டுகள், 11 இடங்களில் 400 வாட்ஸ் மெட்டல் ஹாலைடு, ஐந்துமுக மின் விளக்குகள் 2013-14ஆம் ஆண்டு பொது நிதியில் அமைக்கப்படுவதற்குரிய தீர்மான நகல்கள் மாவட்ட ஆட்சியரின் நிர்வாக அனுமதி மற்றும் பின்விளக்கு அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம், ஒப்பீட்டு பட்டியல், ஒப்பந்த புள்ளி வெளியிட்ட நாளிதழ் விளம்பரம் மற்றும் மாவட்ட தொழில் மையத்திடமிருந்து மின் கம்பங்கள், மின் உயர் கம்பங்கள் உற்பத்தி செய்வதற்கான பணி ஆணை நகல்களை சான்றாவணங்களாக சமர்ப்பித்துள்ளார்.

முறையீட்டு மனு, மனுதாரரின் வாக்குமூலம், செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்யப்பட்டதில் மனுதாரர் புகாரில் முகாந்திரம் எதும் புகார்களை நிரூபிக்கும் வகையில் இல்லாததால் அவற்றை இம்முறைமன்ற நடுவம் நிராகரிக்கலாமென முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள திரு. தமிழ்ச்செல்வன் பின்விளைகுழ் ஆழ்வார் திருநகரில் வீடு கட்டியுள்ளதற்கு துறை அனுமதி பெறவில்லை என செயல் அலுவலர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதையே ஆதாரமாகக் கொண்டு தனியர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்து ஆணையிடப்படுகிறது.

**2017-ம் ஆண்டு ஏப்ரல்** திங்கள் 26-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம்,
சென்னை – 600 108. (இணைப்பு – மனு & வாக்குமூலம்)

2. திரு. M. மாரிமுத்து,
எண்.18, திருமலை நாயுடு தெரு,
திருவைகுண்டம்-628 601.
தூத்துக்குடி மாவட்டம்.

3. செயல் அலுவலர்,
திருவைகுண்டம் பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்-628 601.